எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

4 பெப்ரவரி 2018

பொது காலம் 5ம் ஞாயிறு

Newbec

NEW WAY OF BEING CHURCH

# உடல் நலத்தில் நம்பிக்கை



இயேசு தமது பணி காலத்தின் போது பல அற்புதங்களைச் செய்தார் என நற்செய்தி புத்தகங்கள் கூறுகின்றன. ஆனால் அந்த அற்புதங்களின் செய்தி பலமுறை அவ்வளவாக தெளிவுப்படுத்தப்படவில்லை அல்லது தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இருப்பினும் தமது பரிவன்போடு அவதிப்படும் பலரை அணுகி, அவர்களின் நோய்களையும் துயரங்களையும் போக்கினார் இயேசு. அவர்கள் விரும்பும் உடல் சுகத்தை வழங்குவதே அவரது நோக்கம். அவர்களின் உடல் நலம் பெறுவது, புத்துயிர் பெறும் அவர்களின் விசுவாசம் இயேசுவிடம் அவர்களை இட்டுச் சென்றன. அவர்கள் உடல் வலிமை பெறும் அவர்கள், தங்களது ஆன்ம சுகத்தையும் நாடுவார்கள் என இயேசு எண்ணினார். காய்ச்சலிருந்து குணம் பெற்றதும் சிமோன் மாமியார் துள்ளி எழுந்து ஆண்டவருக்கு பணிவிடை செய்தார் என்பதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் பார்க்கிறோம். கிறிஸ்துவின் சித்தத்திற்கு தங்களையே அர்ப்பணிக்கும் மனப்பான்மையை இயேசுவால் தொடப்பட்டவர்களிடம் இருந்தது. அவர் செய்த அற்புதங்கள் இறைவல்லமையைக் காட்டுவதால் அதிகமான மக்கள் கூட்டம் அவரைத் தேடி செல்வதாக நற்செய்தி வாசகம் மேலும் கூறுகிறது.

எருசலமிற்கு தமது இறுதிப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன், உச்சமாக லாசர் உயிர்த்தெழுதலின் அற்புதத்தை நாம் கேட்கும் போது, நமது மனம் அவற்றை மெத்தனமாக நினைத்து விடக்கூடாது. இவை வெறும் கதைகள் அல்ல. இதற்கு முன் பலமுறை நாம் கேட்டிருப்பதால் அவற்றின் வல்லமையை சாதாரணமாக எண்ணி விடக்கூடாது. உடலால் அதனை அனுபவத்தவர்களின் நம்பிக்கை, நமது துயரத்தைப் போக்கவும் வேதனையை நீக்கவும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை, வாழ்நாள் எல்லாம் மனித இனத்திற்கு கடவுளின் வல்லமைக்கு சாட்சியம் பகரும் மனஉறுதி, நமது ஊன் உடல் இறுதியாக நலிவடைந்தது மறுவாழ்வுக்கு கிறிஸ்துவால் உருமாற்றம் பெறும் விசுவாசம் நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

கப்பர்நாகூம்மில் நிகழ்ந்த அற்புதத்திலிருந்து செபத்திற்கான மனநிலையை அறிந்து கொள்ளலாம். முதலாவதாக, தெய்வீக உதவியை கேட்கும் முன்னர் விசுவாசம் இருக்க வேண்டும். உங்கள் விருப்பத்தை கடவுள் கொடுப்பது விசுவாசமல்ல; ஆனால், அவரது அன்பில் இன்னும் ஆழமாக உறவு கொள்ள இட்டுச் செல்லும் தேவையானதை எப்போதும் அவர் நிறைவேற்றுவார். இரண்டாவது, நல்லதோ கெட்டதோ வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் நம்பிக்கை தரும் கடவுளுக்கு எப்போதும் செபத்தில் நன்றி கூற வேண்டும்.

இதனால் உலகைச் சார்ந்த நமது வாழ்க்கையை அவரோடு நித்திய வாழ்வுக்கு இட்டுச் செல்லும். மூன்றாவதாக, உங்கள் செபங்களுக்கு கடவுள் எவ்வாறு பதில் அளிக்கிறார்? நமது விண்ணப்பங்களுக்கு அவர் அளிக்கும் மறுமொழி சில வேளையில் நமது விருப்பமாக இருக்காது. ஆனால் நமது மீட்புக்கு தேவையானதாக இருக்கும். இறுதியாக, எல்லாவற்றிலும் முதன்மையாக நமது ஆன்ம நலத்தை நாட வேண்டும். இந்த உலகத்தின் பல கவலைகளை குறித்து இயேசு நமக்கு கற்பித்திருக்கிறார். “எதை உண்பது” அல்லது “எதை குடிப்பது” அல்லது “எதை உடுத்துவது” என்பது பற்றி கவலைப்பட வேண்டாம் என கூறியிருக்கிறார். புறவினத்தாரே இவற்றையெல்லாம் நாடுவார்கள். பரலோகத் தந்தைக்கு உங்களின் தேவைகள் அனைத்தும் தெரியும். ஆயினும், முதலில் அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள், அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ✝

INTERNAL CIRCULATION ONLY

BUL 05/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd

*Design:* The Mustard Seed Studio

170th ANNIVERSARY CHURCH OF THE VISITATION

**மினவுதல் மாதா தேவாலயம்**

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2018 பெப்ரவரி (மாசி) மாதத்தின் கருப்பொருள்:*
**ஒருமிக்க நாம் கிறிஸ்துவில் குணமடைகிறோம்**
**மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**( 1848 – 2018 )**

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 03-02-2018 ஞாயிறு 11-02-2018**

யோபு 7: 1-4, 6-7 திபா 146: 1-2, 3-4, 5-6 1 கொரி 9: 16-19, 22-23 மாற்கு 1: 29-39

**உடைந்த உள்ளத்தோரை ஆண்டவர் குணப்படுத்துகிறார் ( தி. பா 146 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 03 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித கிளேரா) | |
| ஞாயிறு | 04 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (புனித கிலாரி)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித அன்னம்மா)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி** (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 06 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 07 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 08 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 09 | 6.45 கா | திருப்பலி | *முப்பெருநாள் கொண்டாட்டம் புனித லூர்து அன்னை சிற்றாலயம் - சாகா* |

**பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

லேவி 13: 1-2, 44-45 தி.பா 31: 1-2, 5, 11 1 கொரி 10: 31-11: 1 மாற்கு 1: 40-45

**ஆண்டவரே நீரே எனக்குப் புகலிடம் ( தி. பா 31 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 10 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித கிளேரா) | |
| ஞாயிறு | 11 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம<br>*6.00 மா* | திருப்பலி (தமிழ்) (புனித கிலாரி)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித அன்னம்மா)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>கிறிஸ்து ஒளி சிற்றாலயம் திருவிழா கம்.செபீர் | **மறைக்கல்வி** (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித ஹிலாரி அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஜனவரி (தை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**
27/28 ஜனவரி 2018 - ரிம: 12,461.40
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

2) **பிப்ரவரி 03/04 திருப்பலிகளில் சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்காக இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.**
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

3) **மினவுதல் தேவாலய புகழ்ச்சி நடனம்** முதலாம் ஆண்டு நிறைவு மற்றும் சீனப்புத்தாண்டு கொண்டாட்டம் பிப்ரவரி 10, 2018 அன்று நடைபெறும். கட்டணம் நபர் ஒருவருக்கு: ரிம:10/- தொடர்புக்கு: ஏஞ்சலின் (017-694 3045 / ஃப்ளோரான்ஸ் 016-2819788)

- **ஆலயத்தில் / வகுப்பறைகளில் உள்ள மேசை நாற்காலிகள்** அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டாம். நல்ல முறையில் பயன்படுத்தவும். அதை சேதமாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.
- **ஆலயத்தில் உள்ளவகுப்பறைகள் / மண்டபம்** கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் ஒத்திகை ஆகியவற்றை நடத்த ஆலய அலுவலகத்தில் முன்பதிவு செய்துகொள்ளுங்கள். கடைசி நேரப் பயன்பாட்டைத் தவிர்க்கவும்.
- **சீனப்பெரு நாள் மதிய விருந்து** மார்ச் 04, 2018(ஞாயிறு) பகல் 12.30 இடம்: மின் கோக் உணவு விடுதி. டிக்கெட்டுகள் ஒரு நபருக்கு ரிம:50/- தொடர்புக்கு : டோரீன் 017-332 6007
- **மினவுதல் தேவாலய வின்செண்ட் டி போல் இயக்கத்தினர்:** ஏழைகளுக்கும், உதவி தேவைப்படுவோர்க்கும் ஆர்வத்தோடும் பணி செய்ய இன்னும் அதிகமான தன்னார்வலர்களைத் தேடுகின்றனர். உங்களுக்கு ஆர்வமிருந்தால் பங்கு அலுவலகம் அல்லது லூயிஸ் (019-622 7440) அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
- இவர்களின் பணி க்கூட்டம் மாதத்தின் முதல் செவ்வாய் அன்று மாலை 4-6 மணி வரை ஆலய உணவு விடுதியில் நடைபெறும்.

- **தனித்திறமைப் போட்டியில்** பங்கேற்ற அனைத்துப் படைப்பாளர்களுக்கும் நன்றி. இதை ஒருங்கிணைத்து வழிநடத்திய ஏற்பாட்டு குழுவினருக்கும் நமது நன்றிகள், இறைவனின் ஆசீர் உங்களுக்கு உரித்தாகுக.
- **2018 ஆம் ஆண்டின் தவக்கால தியானம்:** மனதின் அடிப்படை மாற்றம் - உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், உங்கள் இதயங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள் (யோவேல்: 2:13)
தமிழ்: பிப்ரவரி 16, 2018 (வெள்ளி) காலை 10.00 -6.00 (மாலை) அருள்திரு. குழந்தைசாமி, இந்தியா
ஆங்கிலம் பிப்ரவரி 17 & 18 (சனி) காலை 9.00 - 8.00 (இரவு) & ஞாயிறு காலை 9.00- பகல் 2.00 வரை சகோதரர் ஜூன் அந்தோய்ன், கோலாலம்பூர்
சீனம்: பிப்ரவரி 10, 2018(சனி) பகல் 2.00 - மாலை 6.00 வரை ( அருள்திரு. தோமஸ் கூ CDD, மலாக்கா
தேசிய மொழி 10 & 11, 2018 சனி - காலை 9.00- 4.00 (மாலை) & ஞாயிறு காலை 9.00- 12.30 வரை அருள்திரு. பேட் ரிக் மசாங், CSSR, ஈப்போ.
பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் நடைபெறும்.
- **ரந்தாவ், சாகா சிற்றாலயம், புனித லூர்து அன்னை திருவிழா** வெள்ளி 9/2/2018 மாலை 7.00 மணி செபமாலை, கொடியேற்றம், திருமணி ஆராதனை, நோயில் பூசுதல் அருளடையாளம் நோயாளிகளுக்கு வழங்குதல் நடைபெறும்
சனி 10-02-2018 மாலை 6.30 செபமாலை/திருப்பலி/தேர்ப்பவனி
ஞாயிறு 11.-02-2018 காலை 10.00 செபமாலை/திருவிழா திருப்பலி
- **14 ஆவது பொதுத்தேர்தல் - வாக்காளர்களாக உங்களைப் பதிந்துகொண்டீர்களா?** உங்களுடைய வாக்கை எந்த தொகுதியில் செலுத்த வேண்டும் என்பதை இப்போதே தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள். ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தகவல் மையத்தில் இதைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.
- **பங்கு இளைஞர் சங்கம் - புதிய தலைமைத்துவத்திற்கான தேர்தல் :** நாள்: பிப்ரவரி 04, 2018(ஞாயிறு) மாலை 5.00மணி இடம். ஆலய மண்டபம், மேல்மாடி
- **ராக்கேலின் திராட்சைத் தோட்டத் தியானம் மார்ச் 16-18, 2018 நடைபெறுகிறது.** தொடர்புக்கு: 016-4190538 (சிரில்லா) விவரங்கள் அனைத்தும் இரகசியம் காக்கப்படும்- நேரம் மாலை 7.00 - 9.00 வரை பிப்ரவரி 16 க்குள் பதிந்துகொள்ளவும். அல்லது மின்னஞ்சலில் தொடர்புகொள்ளவும்.email healinggracerachelsvineyard@gmail.com

- **கத்தோலிக்க திருமண முன் தயாரிப்புப் பயிற்சி** பிப்ரவரி 10, 2018 அன்று தொடங்க விருக்கிறது. நேரம்:மாலை 7.30 இடம் விவிலிய அறை.
- **அட்லிமினா மலேசியா, சிங்கப்பூர், புரூணை ஆகிய நாடுகளின் 14 ஆயர்கள் வத்திக்கான் நகரில் திருத்தந்தையை சந்திக்கவிருக்கிறார்கள்.** இதனால் இவர்கள் அனைவரும் பிப்ரவரி 03-10 வரை உரோமை நகரில் இருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் நம் செபங்களில் ஒப்புகொடுப்போம்.
- **திருவழிப்பாட்டுப் பணிக்குழுவினரின் கூட்டம் (அனைத்து மொழி)** -6-2-2018 இரவு 8.00 மணி இடம்:விவிலிய அறை
- **மலரும் மண உறவு வார இறுதிப் பயிற்சி(தமிழ்)** 9-11 பிப்ரவரி. தொடர்புக்கு சேம் போஸ்கோ 012-5170083
- **திருநீற்றுப்புதன் - பிப்ரவரி 14, 2018** திருப்பலி காலை 6.45 (ஆ) மாலை 6.00 (ஆ/சீ/தேமொ) இரவு 8.00 மணி (தமிழ்)
- **சீனப்புத்தாண்டு திருப்பலி: பிப்ரவரி 16, 2018 - காலை 8.30 மணி**
- **கிறிஸ்துவ புகுமுக வகுப்புத் தேர்வாளர்களின் தேர்வுச் சடங்கு: பிப்ரவரி 25, 2018 (ஞாயிறு) காஜாங் திருக்குடும்ப தேவாலயம்.**
- **தேவ அழைத்தல் முகாம் - பிப்ரவரி 24-25 ,2018** இளைஞர்களுக்காக ஸ்தாபாக் நல்லாயன் ஆலயத்தில் நடைபெறும் (வயது 18-35 வரை)
- **கிறிஸ்து ஒளி திருவிழா, கம்போங் செபீர் -** பிப்ரவரி 11 (ஞாயிறு) மாலை 6.00 மணி. அனைவரும் வருக.